அழுத்தம் குறைவாக இருக்குமேயானால் அதுபற்றி என்னிடத்திலே தனியாக எழுதித் தந்தால் உடனடியாக அந்தப் பகுதியினுடைய மின் அழுத்தம் சீர் செய்யப்பட்டு விவசாயிகளுடைய நலன் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 269 திரு. வெ. நடேசன் பால்ராஜ், உறுப்பினர் இருக்கையில் இல்லை

வினா எண். 270,
திரு. கு. லாரன்ஸ, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

270—

பத்மநாபபுரம் நகரத்திற்கு ஏற்படுத்தப்பட்ட குடிநீர்த் திட்டம்.

* 806 திரு. கு. லாரன்ஸ்

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பத்மநாபபுரம் நகரத்திற்கு ஏற்படுத்தப்பட்ட குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) பணியை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) (1) தலைமை நீரேற்று நிலையத்திற்கான விரிவான மதிப்பீடு ரூ. 72.25 இலட்சங்களுக்குத் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

(2) நீர் உந்து பிரதானக் குழாய் பதிப்பதற்கான விரிவான மதிப்பீடு ரூ. 112.00 இலட்சங்களுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன

(3) பகிர்மானக் குழாய்கள் பதிப்பதற்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர். தென் மண்டலம் அவர்களின் பரிசீலனையில் உள்ளது

(4) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிப்பில் உள்ளன,

(ஆ) ஆம்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதில் மிகவும் உற்சாகத்தை அளிக்கிறது. இந்தத் திட்டம் 1990-ல் அரசு ஆணை மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அன்று 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. இந்தத் திட்டம் 1993-ல் முடிக்கப்படும் என்று பல்வேறு அதிகாரிகள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது போன்று அந்த அதிகாரிகளும் மிகச் சிறப்பாகவே பணியாற்றி வருகிறார்கள். இந்தத் திட்டம் வரும் என்ற நம்பிக்கையோடு இந்தக் குடிநீர்த் திட்டம் வருகிற பல்வேறு கிராமங்களில் கிணறுகள் வெட்டுவது அல்லது ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பது போன்ற பணிகள் இன்று நடைபெறாத சூழ்நிலை இருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தில் ஏற்பட்டு இருக்கிற சிக்கல் என்னவென்றால் அதிகாரிகளும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மிகச் சிரமம் எடுத்துப் பணியாற்றினாலும் இந்த ஒப்பந்தப் புள்ளிகளில் அரசினுடைய குறியீடுகளுக்கு அதிகமாகவே ஒப்பந்தக்காரர்கள் கேட்பதாகத் தெரிகிறது. எனவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இந்தத் திட்டம் இப்போது உடனடியாக நிறைவேற்றப்படுவதற்கு ஒரு தடங்கல் இருப்பது போன்று தெரிகிறது. இந்தத் திட்டம் மிக அத்தியாவசியமான திட்டம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஒப்பந்தப் புள்ளிகளில் இருக்கிற....

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் விரிவாகப் பதில் சொல்லியிருக்கிறார். நீங்களும் துணைக் கேள்வியில் விரிவாகப் பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? கேள்வி கேளுங்கள்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி இந்த ஒப்பந்தப் புள்ளிகள் இப்போது ஏற்புடைப்பு உடையதுதானா, உடனே நிறைவேற்ற முடியுமா என்பதை எல்லாம் ஆராய்ந்து அது நிறைவேற்றப்படுகிற அளவில் தன்னுடைய தனிக் கவனத்தைச் செலுத்துவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக தலைமைப் பொறியாளருக்கு அரசின் சார்பில் அறிவுரைகள் வழங்கப்பட்டு இருக்கிறது. நிச்சயமாக வருகிற ஜூன் 1993-க்குள் இந்தத் திட்டம் முடிக்கப்பட்டு பயனுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.